செய்தி வெளியீடு எண்:580 நாள்:22.10.2013

பத்திரிக்கைச் செய்தி

- **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி தீபாவளி பண்டிகைக்கு 33,712 அங்காடிகளுக்கும், விலையில்லா அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் இயக்கம்**
- **வடகிழக்கு பருவமழை காலங்களில் விலையில்லாஅரிசி, மண்ணெண்ணெய் தொய்வின்றி விநியோகம் செய்ய முன்னெச்சரிக்கை நடவடிக்கை**
- **தொடர்மழை காலங்களில் சிறப்பு கட்டுப்பாட்டு அறைகள்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் அத்தியாவசியப் பொருள்கள் தடையின்றி கிடைத்திடுவதை உறுதி செய்யும் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ், தலைமையில் 22.10.2013 மாலை 6.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

நடப்பு அக்டோபர் 2013 மாதத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் தீபாவளி பண்டிகைக்கு தேவையான புழுங்கலரிசி, பச்சரிசி, சர்க்கரை, கோதுமை, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் முதலான அத்தியாவசியப் பொருள்களை அங்காடிகளில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாட்டின் தேவைக்கென கிடங்குகளில் சுமார் நான்கு மாத பொது விநியோகத் திட்டத்திற்குப் போதுமான 12 இலட்சம் மெ.டன்

அரிசி உள்ளது. நவம்பர் 2013 மாதத்திற்கான அத்தியாவசியப் பொருள்கள் ஒதுக்கீட்டின்படி முன் நகர்வு செய்து முடிக்கப்பட வேண்டுமென துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

பண்டிகைக் காலங்களில் வெளிச்சந்தையில் அரிசி விலை உயராமல் தடுப்பதற்கு அனைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். மாண்புமிகு அம்மா அவர்கள் தங்களது திருக்கரங்களால் துவக்கி வைத்த 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 52,400 குவிண்டால் வெளிச்சந்தை அரிசி 279 கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளினால், வெளிச்சந்தை அரிசி விலை கட்டுப்பாடின்றி உயராமல் தடுக்கப்பட்டதுடன், அரிசி விலையும் தற்போது வெகுவாக குறைந்து வருகிறது.

தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 33,712 நியாய விலை அங்காடிகள் மூலம் விநியோகம் செய்யப்படும் பொது விநியோகத் திட்ட பொருள்கள் தரமானதாக, எடை குறைவின்றி, உரியவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உணவு, கூட்டுறவு, வருவாய்த்துறை மற்றும் உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு காவல் அலுவலர்கள் இணைந்து பணியாற்றி உறுதி செய்ய வேண்டும். இம்முயற்சியில் தொய்வு ஏதும் காணப்பட்டால் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தங்களது துறைத்தலைவர்களை அணுகி உடனடியாக தீர்வு காண வேண்டுமென அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ளதால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், காவேரி டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பிற மாவட்டங்கள் அனைத்திலும் போதுமான அத்தியாவசியப் பொருள்கள் கிடங்குகளில் இருப்பு வைத்து அங்காடிகளுக்கு அவ்வப்போது

நகர்வு செய்ய முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், தாழ்வான பகுதிகளில் மழை நீர், வெள்ளம் புகுந்து கிடங்குகள் மற்றும் நியாய விலை அங்காடிகளில் உள்ள அத்தியாவசியப் பொருள்கள் சேதமடையமால் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. மழைநீரில் சேதமடைந்த அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்கள் அங்காடிகளில் காணப்பட்டால் அவற்றை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பார்வையிட்டு, அப்பொருள்களை மக்களுக்கு விநியோகம் செய்யாமல் கிடங்குகளுக்கு திருப்பி அனுப்பி தரமான பொருள்களை மட்டுமே பெற்று விநியோகம் செய்ய வேண்டும்.

மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் குடிசைப்பகுதிகளில் பொது மக்களுக்கு தேவைப்படும் மண்ணெண்ணெய்யை முன்னுரிமை அடிப்படையில் நகர்வு செய்து விநியோகம் செய்ய வேண்டுமென அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். தொடர்மழை காலங்களில் அங்காடிகளில் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் குறைபாடுகள் ஏதும் காணப்பட்டால் நுகர்வோர் அமைப்புகள், குடும்ப அட்டைதாரர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் தங்கள் குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ள கீழ்க்கண்ட விவரப்படி கட்டுப்பாட்டு அறைகள் செயல்படும்.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக, நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை (94451 90660, 94451 90661, 94451 90662)

- உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலகம், சென்னை (044–28592828)

- மாவட்ட தலைநகரங்களில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட வழங்கல் அலுவலர், கூட்டுறவு இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் அலுவலக தொலைபேசி

தமிழ்நாட்டில், செயல்படுத்தப்பட்டு வரும் “விலையில்லா அரிசி” விநியோகம் போன்ற உன்னத திட்டங்களின் முழுப்பயன்களும் ஏழை, எளிய மக்களை சென்றடையவும், அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி கடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட வேண்டும். தமிழ்நாட்டில் இன்று வரை 21,433 கடத்தல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13,316 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் 479 நபர்கள் தடுப்பு காவல் சட்டத்தின்படி (BM Act) கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் எனவும் உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அரசு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை செயலாளர் திருமதி.எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் கடத்தல் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இணை ஆணையாளர் திருமதி.ரமணசரஸ்வதி, மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**